
**ஆகஸ்ட் – 07**

# TNPSC துளிகள்

- ❖ தெற்கு காஷ்மீரின் குல்காமின் அகல் பகுதியில் இராணுவம், ஜம்மு காஷ்மீர் காவல்துறை மற்றும் CRPF ஆகியவற்றால் ஆபரேஷன் அகல் எனும் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை நடத்தப்பட்டது.
- ❖ பாதுகாப்பான மற்றும் நிகழ்நேரத் தொழில்துறை இணைப்புக்காக என சுத்திகரிப்புத் துறையில் இந்தியாவின் முதல் வரையறுக்கப்பட்ட தனியார் 5G வலையமைப்பினை (CNPN) பயன்படுத்துவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் BSNL மற்றும் நுமாலிகார் சுத்திகரிப்பு நிறுவனம் (NRL) ஆகியவை கையெழுத்திட்டுள்ளன.
- ❖ முதல் முறையாக நடைபெற்ற செஸ் ஈஸ்போர்ட்ஸ் உலகக் கோப்பை போட்டியின் இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் இயன் நெபோம்னியாச்சியை வீழ்த்தி, நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன் பட்டத்தை வென்றார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## உண்மையான மதிப்பீட்டில் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி – தமிழ்நாடு




- ❖ 14 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாடு உண்மையான பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தில் பதிவாகியுள்ளது.
- ❖ 2024-25 ஆம் ஆண்டில் தமிழகம் 11.19% என்ற அளவிலான வளர்ச்சியைப் பதிவு செய்து உள்ளது.
- ❖ மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் படி இந்தத் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்த ஆண்டின் தொடக்கத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் குறிக்கப்பட்ட கணிப்பை இது சுமார் 2.2% என்ற விகிதத்தில் தாண்டியுள்ளது.
- ❖ 2010-11 ஆம் ஆண்டில், தமிழகத்தில் 13.12% என்ற அளவிலான வளர்ச்சிப் பதிவானது என்பதோடு தற்செயலாக, இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், திமுக கட்சியே இங்கு

ஆட்சியில் இருந்தது.

- பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, அடிப்படை ஆண்டு 2004-05 ஆக நிர்ணயிக்கப் பட்டது, ஆனால் அது தற்போது 2011-12 ஆகும்.
- மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் துறைகளின் வலுவான செயல்திறனால் தான் இந்த வளர்ச்சி ஏற்பட்டது.
- சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பு, மாநிலத்தின் வாரியான முன்கூட்டிய மதிப்பீடுகள் வெளியிடப் பட்ட போது, தமிழ்நாட்டின் உண்மையான பொருளாதார வளர்ச்சி 9.69% ஆக இருந்தது.
- ஆனால் சமீபத்தியப் புள்ளிவிவரம் அதன் வளர்ச்சியில் சுமார் 1.5 சதவீதப் புள்ளிகளின் அதிகரிப்பைக் குறிக்கிறது.
- முதலிடத்தைப் பிடித்ததோடு, வேறு எந்த மாநிலமும் எட்டாத இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்து தமிழ்நாடு சாதனையைப் படைத்துள்ளது.
- கோவா, குஜராத் மற்றும் நான்கு வடகிழக்கு மாநிலங்கள் உள்ளிட்ட ஆறு மாநிலங்களுக்கான தரவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.
- 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) 14.5% ஆக வளரும் என்று கணிப்பதில் மாநில அரசு மிதமாக இருந்தது.
- இந்தக் கணிப்பு உண்மையான வளர்ச்சி 9% ஆகவும் சராசரி பணவீக்கம் 5% ஆகவும் குறிக்கப்பட்டது.
- ஆனால் உண்மையான வளர்ச்சி சுமார் 2.2% அதிகமாகும்.
- நிலையான விலையில் (அடிப்படை ஆண்டு: 2011-12), தமிழ்நாட்டின் GSDP 2024-25 ஆம் ஆண்டில் 17,32,189 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதோடு இது 2023-24 ஆம் ஆண்டில் 15,57,821 கோடி ரூபாயாக இருந்தது.
- உண்மையான GSDP வளர்ச்சி 8.23% என்ற அளவிலிருந்து 9.26% ஆக உயர்த்தப் பட்டது என்பதுடன், திருத்தப் பட்டப் புள்ளி விவரங்கள் 2023-24 ஆம் ஆண்டிற்கான வலுவான செயல்திறனையும் சுட்டியுள்ளது.
- இருப்பினும், 2022-23 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வளர்ச்சி 8.13% என்ற அளவில் இருந்து 6.17% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- நடப்பாண்டு விலைகளில் தனிநபர் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி (NSDP) குறித்த தரவுகளின்படி, 2024-25 ஆம் ஆண்டில் 3,61,619 ரூபாய் என்ற மதிப்பிடப்பட்ட தனிநபர் வருமானத்துடன் தமிழ்நாடு முன்னணி மாநிலங்களில் மூன்றாவது இடத்தைப் பிடித்து உள்ளது.
- இது தெலுங்கானா (3,87,623 ரூபாய்) மற்றும் கர்நாடகா (3,80,906 ரூபாய்) ஆகியவற்றைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.

## 15 மில்லியன் டன் சரக்குகள்

- இந்த நிதியாண்டில் ஆகஸ்ட் 03 ஆம் தேதியன்று தூத்துக்குடியில் உள்ள வ.உ. சிதம்பரனார் துறைமுகம் சரக்கு கையாளுதலில் 15 மில்லியன் டன் என்ற இலக்கை எட்டியது.
- முந்தைய நிதியாண்டை விட 11 நாட்கள் முன்னதாகவே இந்த மைல்கல் எட்டப் பட்டு உள்ளது.
- இந்த நிதியாண்டில் ஆகஸ்ட் 3 ஆம் தேதி வரை இத்துறைமுகம் 2,98,107 TEU (இருபது அடிக்குச் சமமான அலகு) கொள்கலன்களைக் கையாண்டுள்ளது.

- முந்தைய நிதியாண்டின் இதே காலத்தில் கையாளப்பட்ட 2,71,620 TEU என்ற அளவுடன் ஒப்பிடும் போது இது 9.75% வளர்ச்சியைப் பதிவு செய்கிறது.
- இந்த சாதனைக்குப் பங்களித்த முக்கியப் பொருட்களில் நிலக்கரி, சுண்ணாம்புக்கல், உப்பு, பாறை பாஸ்பேட், சமையல் எண்ணெய் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆகியவை அடங்கும்.
- திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் கரூரில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சியும் கொள்கலன் கையாளுதல் அளவை அதிகரித்து உள்ளது.
- மொத்தச் சரக்குகளை கையாளுவதற்கான மூன்றாவது வடக்கு சரக்கு மண்டலத்தின் செயல்பாடு ஆனது இந்தத் துறைமுகத்தின் மேம்படுத்தப் பட்ட செயல்திறனுக்கு மற்றொரு முக்கியப் பங்களிப்பாகும்.
- இது சமீபத்தில் ஜூலை 26 ஆம் தேதியன்று பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப் பட்டது.




## வின்ஃபாஸ்ட் மின்சார வாகன உற்பத்தி ஆலை

- வின்ஃபாஸ்ட் எனும் வியட்நாமிய மின்சார வாகன (EV) தயாரிப்பு நிறுவனத்தினால் தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் அதன் முதல் உற்பத்தி ஆலையை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- இந்த ஆலையானது, 2024 ஆம் ஆண்டு தமிழக அரசாங்கத்துடன் இணைந்து நடைபெற்ற உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பின் போது கையெழுத்திடப்பட்ட 16000 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீட்டு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் திட்டமானது, அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 3500க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது மற்றும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உள்ளூர் இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கு ஆதரவளிக்கிறது.
- தூத்துக்குடி ஆலையினை தெற்காசியா, மத்தியக் கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா ஆகியவற்றுக்கான அதன் மிகப்பெரியதான ஒரு ஏற்றுமதி மையமாக மாற்றுவதற்கு வின்ஃபாஸ்ட் திட்டமிட்டுள்ளது.

- இந்தியாவில் விற்கப்படும் அனைத்து மின்சார வாகனங்களிலும் 40 சதவீதப் பங்கினை தமிழ்நாடு கொண்டுள்ளது.




## காவல் துறை மதிப்பீட்டில் சாதிப் பிரிவு நீக்கம்

The 5th Tamil Nadu Police Commission has recommended a pay hike for police constables, aligning their salaries with counterparts in the Union govt and other States. It proposed raising the pay scale from ₹18,200-₹52,900 to ₹21,700-₹69,100. The report also suggests increasing the minimum educational qualification to Class XII and addressing police mental health issues through periodic reviews and well-being programs. The commission, formed in 2022, submitted its recommendations to Chief Minister M.K. Stalin recently.

- தலைமைக் காவலர் மற்றும் சிறப்புத் துணை ஆய்வாளர்களின் செயல்திறன் மீதான மதிப்பீட்டுப் படிவங்களிலிருந்து சாதி அல்லது சமூகப் பிரிவை நீக்க தமிழ்நாடு ஐந்தாவது காவல் துறை ஆணையம் பரிந்துரைத்துள்ளது.
- முன்னாள் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி C.T. செல்வம் தலைமையிலான இந்தக் குழுவானது, தொழில்முறைப் பணிகளை மதிப்பிடுவதற்கு சாதி விவரங்கள் தேவை அற்றவை என்றும், அவை ஒரு சார்பு நிலைக்கு வழி வகுக்கும் என்றும் கூறியது.
- இந்திய காவல் பணி அதிகாரிகள் உள்ளிட்ட உயர் காவல் அதிகாரிகளின் வருடாந்திர மறைக் காப்பு அறிக்கைகளில் (ACR) சாதிக் குறிப்பு சேர்க்கப்படவில்லை.
- காவல் நிலையங்களில் எந்த சட்ட விதிகளும் அதை அனுமதிக்காத, புகார்தாரர்கள் மற்றும் குற்றம் சாட்டப் பட்டவர்களின் சாதியைப் பதிவு செய்யும் நடைமுறையை முடிவுக்குக் கொண்டுவரவும் அறிக்கை பரிந்துரைக்கிறது.
- கிராமங்களில் தெருக்களிலும் எல்லைக் குறிகளிலும் இருந்து சாதிப் பெயர்களை நீக்க அனைத்துக் கட்சிப் பேச்சுவார்த்தைகளை நடத்துமாறு ஆணையம் அரசாங்கத்தை வலியுறுத்தியது.
- சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதிக்கும் சாதி தொடர்பான பல்வேறு செயல்பாடுகளைக்

கண்காணிப்பதற்காக சாதி சார்ந்தப் பிரச்சினைகள் அதிகம் எழும் மாவட்டங்களில் சிறப்புப் புலனாய்வுப் பிரிவுகளை (SIC) அமைக்கவும் அது கோரிக்கை விடுத்தது.

# தேசியச் செய்திகள்

## PM Ekta பல்கடை அங்காடிகள்





- 2023-24 ஆம் ஆண்டு மூலதன முதலீட்டுத் திட்டத்தின் கீழ் PM Ekta பல்கடை அங்காடிகளை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கைகளுக்கு (DPRs) இருபத்தேழு மாநிலங்கள் ஒப்புதல் அளித்துள்ளன.
- PM Ekta பல்கடை அங்காடிகள் அனைத்து பிராந்தியங்களிலிருந்தும் ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு (ODOP) பொருட்கள், புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் மற்றும் பாரம்பரிய கைவினைப் பொருட்களை ஊக்குவித்து விற்பனை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது கைவினைஞர்களை ஆதரிப்பதற்கும் உள்ளூர்ப் பொருளாதாரங்களை வலுப்படுத்துவதற்காகவும் 2023-24 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை ஒதுக்கீட்டில் அறிவிக்கப்பட்டது.
- இதற்காக, மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கான சிறப்பு உதவி (SASCI) திட்டத்தின் VIவது பகுதியின் கீழ் நிதி அமைச்சகத்தினால் மொத்தம் 5000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.
- தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறையானது (DPIIT) செலவினத் துறையின் ஒப்புதலுக்காக இந்தத் திட்டத்தினைப் பரிந்துரை செய்து உள்ளது.

## இந்தியா-ஐ.நா. உலகளாவியத் திறன் மேம்பாட்டு முன்னெடுப்பு

- 2025 ஆம் ஆண்டு இந்தியா-ஐ.நா. உலகளாவியத் திறன் மேம்பாட்டு முன்னெடுப்பின் கீழான முதல் நான்கு திட்டங்கள் ஆனது ஆகஸ்ட் 01 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து வெளியுறவு அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டன.
- இந்த முன்னெடுப்பானது, தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பை ஆதரிப்பதோடு, வளர்ந்து

வரும் நாடுகள் சிறப்பு பயிற்சி மூலம் SDG இலக்குகளை அடைய உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த திட்டங்களில் உலக உணவுத் திட்ட ஆதரவுடன் நேபாளத்தில் அரிசி ஊட்டச்சத்து செறிவூட்டல் மற்றும் விநியோகச் சங்கிலி மேலாண்மை ஆகியவை அடங்கும்.
- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து சாம்பியா மற்றும் லாவோ PDR ஆகிய நாடுகளுக்கு ஒரு டிஜிட்டல் சுகாதார தளம் உருவாக்கப்படும்.
- ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியத்துடன் இணைந்து, ஐந்து கரீபியன் நாடுகளில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தயார்நிலைக்கான ஆதரவுகள் வழங்கப்படும்.
- ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் ஆதரவுடன் தெற்கு சூடானில் ஒரு தொழில் பயிற்சித் திட்டம் தொடங்கப்படும்.




## பதல்பானி–கலகுண்ட் பாதை

- இந்திய இரயில்வே நிர்வாகமானது, மத்தியப் பிரதேசத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க (155 ஆண்டுகள் பழமையான) பதல்பானி-கலகுண்ட் என்ற பாரம்பரிய இரயிலின் இயக்கத்தினை மீண்டும் தொடங்கியுள்ளது.
- இது டாக்டர் அம்பேத்கர் நகர் (முன்னர் மோவ் என்றழைக்கப்பட்ட) முதல் காண்ட்வா வரையிலான பாதையில் 9.5 கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு பகுதியாகும்.
- இந்தப் பாதையை, 1844 முதல் 1886 ஆம் ஆண்டு வரையில் ஆட்சி செய்த மகாராஜா இரண்டாம் துகோஜி ராவ் ஹோல்கர் முன்மொழிந்தார்.
- 1870 ஆம் ஆண்டில், இந்தூருக்கு இரயில் பாதை அமைப்பதற்காக 101 ஆண்டுகளுக்கு 1 கோடி ரூபாய் கடனும், இலவச நிலமும் வழங்கினார்.
- இந்தூர் சமஸ்தானம் ஆனது, 1818 ஆம் ஆண்டில் ஹோல்கர் வம்சத்தின் கீழ் பிரிட்டிஷ் கீழான காப்பு நாடாக மாறியதால், ரயில்வே மேம்பாட்டின் தேவையை உருவாக்கியது.
- பதல்பானி–கலகுண்ட் பாதை இந்திய இரயில்வே நிர்வாகத்தின் ஆறு பாரம்பரியப் பாதைகளில் ஒன்றாகக் கருதப்பட்டாலும், இன்னும் இரயில்வே வாரியத்தின் அதிகாரப் பூர்வச் சான்றிதழுக்காகக் காத்திருக்கிறது.
- 2008 ஆம் ஆண்டில், 472.64 கிலோமீட்டர் நீளமுள்ள இரத்லம்-மோவ்-கண்ட்வா-அகோலா வழித்தடத்தினை அகல இரயில் பாதையாக (BG) மாற்ற என்று மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

- புவியியல் சிக்கல்கள் காரணமாக பதல்பானி-கலகுண்ட் பிரிவில் அகல இரயில் பாதை அமைக்கும் பணிகள் சாத்தியமில்லை.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது, பின்னர் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதியை பாரம்பரிய இரயில்களின் இயக்கத்திற்கான பாதையாக மாற்ற முடிவு செய்தது.




## ஏர்பஸ் C295




- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 03 ஆம் தேதியன்று ஸ்பெயின் நாட்டின் செவில்லே எனும் இடத்திலிருந்து 16 ஏர்பஸ் C295 ரக இராணுவ போக்குவரத்து விமானங்களில் கடைசி விமானத்தினை இந்தியா பெற்றது.
- 2.5 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தின் கீழ், மொத்தம் 56 விமானங்களில் 40 விமானங்கள் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் நிறுவனத்தினால் இந்தியாவில் தயாரிக்கப்படும்.

- C295 என்பது போக்குவரத்து, கண்காணிப்பு, மருத்துவ அவசர நிலை வெளியேற்றம் மற்றும் பிற பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் பல்துறை பயன்பாட்டு உத்திசார் விமானமாகும்.
- இது பாதுகாப்பு விமானத் துறையில் உள்ள இந்தியாவில் தயாரித்தல் திட்டத்தின் கீழான முதல் விமானமாகும்.

## ஆயுர்வேத ஆஹாரா தயாரிப்புகள்




- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலை நிர்ணய ஆணையம் (FSSAI) ஆனது ஆயுஷ் அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து ஆயுர்வேத ஆஹாரா தயாரிப்புகளின் உறுதியான பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்தப் பட்டியல் ஆனது 2022 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆயுர்வேத ஆஹாரா விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டது.
- A அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள செவ்வியல் ஆயுர்வேத நூல்களிலிருந்து இந்த சூத்திரங்கள் எடுக்கப்பட்டு B அட்டவணையின் முதல் குறிப்பின் கீழ் வெளியிடப்பட்டு உள்ளன.
- ஆயுர்வேத ஆஹாரா பொருட்களை உற்பத்தி செய்வதற்கான நம்பகமான குறிப்புடன் உணவு வணிக நிறுவனங்களுக்கு உதவுவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

## சமையல் எண்ணெய் விதிமுறைகளில் திருத்தங்கள்


- நுகர்வோர் விவகார அமைச்சகமானது, 1955 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் கீழ், 2011 ஆம் ஆண்டு தாவர எண்ணெய் பொருட்கள் உற்பத்தி மற்றும் கிடைக்கும் அவற்றின் தன்மை (ஒழுங்குமுறை) ஆணையில் திருத்தங்களை மேற் கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்தியாவின் சமையல் எண்ணெய் துறையில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல், விநியோக இடையூறுகளைத் தடுத்தல் மற்றும் நியாயமான விலையை உறுதி செய்தல் போன்றவற்றை இந்தத் திருத்தங்கள் நோக்கமாகக்

கொண்டுள்ளன.

- இந்தியா உலகின் மிகப்பெரிய தாவர எண்ணெய் இறக்குமதி நாடாக உள்ளது.
- இறக்குமதியில் செம்பனை எண்ணெய்/பாமாயில் 59 சதவீதமும், அதைத் தொடர்ந்து சோயா அவரை எண்ணெய்/சோயாபீன் 23 சதவீதமும், சூரியகாந்தி எண்ணெய் 16 சதவீதமும் அதனதன் பங்கினைக் கொண்டுள்ளன.
- 2015-16 ஆம் ஆண்டில் 63.2 சதவீதமாக இருந்த இறக்குமதி சார்புநிலையானது, 2021-22 ஆம் ஆண்டில் 54.9 சதவீதமாகக் குறைந்தது.




## மாவட்ட வெள்ளத் தீவிரக் குறியீடு




- டெல்லி மற்றும் காந்திநகரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்களைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மாவட்ட வெள்ள தீவிர குறியீட்டை (DFSI) உருவாக்கி உள்ளனர்.
- DFSI ஆனது நாட்கள் அடிப்படையிலான சராசரி வெள்ள நீடிப்பு காலம், முன்னர் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கிய மாவட்டப் பகுதியின் சதவீதம், மொத்த உயிரிழப்புகள், காயங்கள் மற்றும் மாவட்ட மக்கள் தொகை ஆகியவற்றின் காரணிகளைக் கொண்டு உள்ளது.

- 1967 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் சேகரிக்கப்பட்ட இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) தரவை இந்தக் குறியீடு பயன்படுத்துகிறது.
- வெள்ளப் பாதிப்பு அளவை மையமாகக் கொண்ட முந்தைய குறியீடுகளைப் போல அல்லாமல், DFSI ஆனது மக்கள் மற்றும் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் வெள்ளத்தின் தாக்கத்தை அளவிடுகிறது.
- பாட்னா நகரானது, DFSI குறியீட்டில் மிக உயர்ந்த இடத்தில் உள்ளது, அதே நேரத்தில் திருவனந்தபுரம் ஆனது மிகக் குறைவான தாக்கங்கள் காரணமாக குறைந்த பாதிப்பு தீவிரத்தைக் கொண்ட அதிக வெள்ளப் பாதிப்புகளைக் கொண்டுள்ளது.
- கடுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களை உடனே அடையாளம் காண உதவுவதன் மூலமும், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைகளை வழி நடத்துவதன் மூலமும் வெள்ள மேலாண்மையை மேம்படுத்துவதை இந்தக் குறியீடு நோக்கமாகக் கொண்டு உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்கை நுண்ணறிவு நடைமுறை விதிகள்




- மெட்டா நிறுவனத்தின் தளங்கள் ஆனது, ஐரோப்பிய ஆணையத்தின் பொது நோக்க செயற்கை நுண்ணறிவிற்கான (GPAI) நடைமுறை விதிகளில் கையெழுத்திட மறுத்து விட்டன.
- இந்த விதிகள் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 02 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் EU AI சட்டத்துடன் இணைக்கப்பட்ட ஒரு தன்னார்வ கட்டமைப்பாகும்.
- இதற்கு ஆவணப் புதுப்பிப்புகள் பெருமளவில் தேவைப்படுவதுடன், இணைக்கப்பட்ட உள்ளடக்கத்துடன் கூடிய செயற்கை நுண்ணறிவுப் பயிற்சியைத் தடை செய்கிறது மற்றும் ஆபத்து சார்ந்த மதிப்பீடுகளை கட்டாயமாக்குகிறது.

## முதல் BIMSTEC பாரம்பரிய இசை விழா


- பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு அமைப்பின் (BIMSTEC) முதல் பாரம்பரிய இசை விழாவானது புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்தியா, வங்காளதேசம், பூடான், மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்தைச் சேர்ந்த கலைஞர்கள் இந்த அமைப்பின் ஏழு உறுப்பினர் நாடுகளின் வளமான இசைப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர்.

- 'SaptaSur: Seven Nations One Melody' என்று பெயரிடப்பட்ட இவ்விழாவினை இந்தியக் கலாச்சார உறவுகளுக்கான சபை (ICCR) ஏற்பாடு செய்தது.
- தாய்லாந்தில் நடைபெற்ற BIMSTEC உச்சி மாநாட்டில் இசை மூலம் பிராந்திய கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவதற்கான பிரதமரின் உறுதிப்பாட்டைப் பின்பற்றி இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப் பட்டது.




## மாநிலச் செய்திகள்

### மாத்ரி வன் முன்னெடுப்பு





- அரியானாவின் குருகிராமில் மாத்ரி வன் முன்னெடுப்பு தொடங்கப்பட்டது.
- குருகிராம்-ஃபரிதாபாத் சாலையில் உள்ள ஆரவல்லி மலைப் பகுதியில் 750 ஏக்கர் பரப்பில் கருப்பொருள் அடிப்படையிலான நகர்ப்புற வனத்தை உருவாக்குவதே இதன்

நோக்கமாகும்.

- இந்த முன்னெடுப்பானது டெல்லியின் தேசியத் தலைநகர்ப் பகுதியில் பல்லுயிர்ப் பெருக்கம், பொது நல்வாழ்வு மற்றும் நீடித்த நிலையான நகர்ப்புற வாழ்க்கையை ஊக்குவிக்கும் இயற்கையான அமைப்பினைப் போன்ற பசுமையானப் பகுதியினை உருவாக்கும்.
- பருவநிலை நடவடிக்கையின் ஒரு முக்கியப் பகுதியாக மரங்களை நட்டு காடழிப்பைத் தடுப்பதன் மூலம் குடிமக்கள் வன் மித்ராக்களாக மாறுவதற்கு ஊக்குவிக்கப்பட்டனர்.

## ஓய்வேற்பு விடுப்புத் திட்டம்





- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் முறையான ஓய்வேற்பு விடுப்புத் திட்டத்தை அறிமுகப் படுத்திய முதல் இந்திய மாநிலமாக சிக்கிம் மாறியது.
- அரசு ஊழியர்களிடையே தனிப்பட்ட வளர்ச்சி, திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவினை ஆதரிப்பதே இதன் நோக்கமாகும்.
- ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையை ஆற்றிய ஊழியர்கள் ஐம்பது சதவீத அடிப்படை ஊதியத்துடன் 365 முதல் ஆயிரத்து எண்பது நாட்கள் வரை இதில் விடுப்பு எடுக்கலாம்.
- இந்தத் திட்டமானது ஊழியர்களின் வயது மூப்புத்தன்மையைப் பாதுகாக்கிறது மற்றும் ஒரு மாத அறிவிப்புடன் அவர்களை பணிக்குத் திரும்ப அழைக்கவும் வேண்டி அரசாங்கத்திற்கு அனுமதி அளிக்கிறது.
- தற்காலிக ஊழியர்களும், சமமானச் சலுகைகளுடன் ஆறு மாத கால தொடர்ச்சியான பணிக்குப் பிறகு இத்தகைய விடுப்பினைப் பெறலாம்.

## மகாநதி நீர் தகராறு


- மகாநதி நீர்த் தகராறுத் தீர்ப்பாயத்தின் (MWDT) முன் மகாநதி நீர்ப் பிரச்சினையினை இணக்கமாக தீர்க்க ஒடிசா மற்றும் சத்தீஸ்கர் மாநில அரசுகள் விருப்பம் தெரிவித்து உள்ளன.
- இரு மாநிலங்களும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டிய செயலாளர்களுடன் தீர்வு சார்ந்த பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து இந்தத் தீர்ப்பாயத்திற்குத் தெரிவிக்கும்.

- மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ், மத்திய நீர் வள ஆணையம் (CWC) தலைமையிலான ஒரு கூட்டுக் குழுவை அமைக்க ஒடிசா முன்மொழிந்தது.
- சத்தீஸ்கரில் உருவாகும் மகாநதி, 851 கிலோமீட்டர் தூரம் பாய்ந்து பின்னர் வங்காள விரிகுடாவை அடையும் முன், 494 கிலோமீட்டர் தூரம் வரையில் ஒடிசாவில் பாய்கிறது.
- சத்தீஸ்கர் மாநிலத்தில் இந்த நதியின் மேல் மட்ட ஓட்டத்தில் மேற்கொள்ளப்படும் கட்டுமானங்கள் நதி ஓட்டத்தைக் குறைத்து, பாசனம், குடிநீர் மற்றும் சூழலியல் ஆகியவற்றைப் பாதித்ததாக ஒடிசா குற்றம் சாட்டுகிறது.
- அதன் நீர்ப் பயன்பாட்டை நியாயப்படுத்தி, நதியின் மொத்த நீர்ப்பிடிப்பு பகுதியில் 52.9 சதவீதம் ஆனது அதன் எல்லைகளுக்குள் இருப்பதாக சத்தீஸ்கர் கூறுகிறது.
- இந்தச் சர்ச்சையானது 1956 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் தகராறுகள் சட்டத்தின் கீழ் உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் 2018 ஆம் ஆண்டில் MWDT உருவாவதற்கு வழி வகுத்தது.




# இதரச் செய்திகள்

## காஷ்மீரின் சாரதா எழுத்துவடிவம்




- சாரதா எழுத்து வடிவிற்கென பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்ட முதல் கண்காட்சி ஸ்ரீநகரில் உள்ள சினார் புத்தக விழாவில் நடைபெற்றது.
- கி.பி 8 மற்றும் 9 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் உருவாக்கப்பட்ட சாரதா எழுத்து வடிவமானது பிரதானமாக காஷ்மீரி பண்டிதர்களால் பயன்படுத்தப்பட்டது.
- 1875 மற்றும் 1925 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் காகிதம் மற்றும் பிர்ச் மரப் பட்டைகளில் எழுதப்பட்ட பல நூல்கள் கொண்ட சில கையெழுத்துப் பிரதிகள் எஞ்சி உள்ளன.
- தொல்பொருள் கண்டுபிடிப்புகளில் குப்வாராவின் லோலாப் பள்ளத்தாக்கில் உள்ள வீரக்கற்களில் சாரதா கல்வெட்டுகளின் 21 வரிகளும், பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள

கண்டுபிடிப்புகளும் அடங்கும்.

✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯